மா சே துங்

# கட்சி வரலாற்றில் சில பட்டறிவுகள்

பொதுமை வெளியீடு
பெங்களூர்

[ 25 காசு ]

(இலத்தீன் அமெரிக்கப் பொதுவுடைமையருடன் நடத்திய கலந்துரையாடலின் ஒரு பகுதி)

## செப்டம்பர் 25, 1956.

அமெரிக்க வல்லரசு உங்களுடைய எதிரி மட்டுமல்ல; எங்கள் எதிரியும், உலக மக்கள் அனைவரின் எதிரியும் ஆகும். இவ்வல்லரசு, உங்களின் உள்நாட்டு நடப்புகளில் தலையிடுவதைக் காட்டிலும், எங்கள் நாட்டில் தலையிடுவது கடினமான ஒன்றாகும். அமெரிக்க நாடு எம்மிடமிருந்து வெகு தொலைவில் உள்ளது அதற்குரிய ஒரு காரணமாகும். ஆயினும், அவ்வல்லரசு, தைவான், யப்பான், தென் கொரியா, தென் வியத்னும், ஃபிலிப்பைன்சு போன்ற நாடுகள் வரையிலும் எட்டியுள்ளது. பிரிட்டன், ஃபிரான்சு, இத்தாலி, ஐசுலாந்து, மேற்கு செருமனி போன்ற நாடுகளில் அந்நாடு தன்னுடைய படைகளை நிறுத்தி வைத்திருப்பதோடன்றி; வட ஆப்பிரிக்காவிலும் நடுக்கிழக்கு ஆசிய நாடுகளிலும் படைத் தளங்களை அமைத்துள்ளது. அது உலகின் எல்லா மூலை முடுக்குகளையும் எட்டியுள்ளது. இஃதோர் உலகந்தழுவிய வல்லரசாகும். அஃது எதிர்நிலைச் சான்றுகளைக் கொண்டு அனைத்து நாட்டு மக்களுக்கும் கல்விப் புகட்டுகின்ற ஓர் ஆசிரியனுகவும் விளங்குகின்றது. இந்த அமெரிக்க வல்லரசின் கொடுங்கரங்கள் எங்கெங்கு நீண்டாலும் அதை வெட்டி வீழ்த்துவதற்காகவென உலக மக்கள் யாவரும் ஒன்றிநின்று ஒருவருக்கொருவர் உதவவேண்டும். அதனுடைய கொடுங்கரங்கள் ஒவ்வொன்றையும் ஆங்காங்கே துண்டிக்கும் போதெல்லாம் நாம் சிறிது ஆறுதல் பெறுவோம்.

கடந்த காலத்தில், சீனநாடும் வல்லரசாலும், நிலவுடைமையாலும் ஒடுக்கப்பட்டு வந்தது. அதனுல் நம்முடைய நாடுகளின் நிலைமைகள் நன்கு ஒத்திருக்கின்றன. நாட்டுப்புறங்களில் மிகப் பெரியதொரு மக்கட்தொகை இருப்பதும்; நிலவுடைமைக்குரிய ஆற்றல்கள் விளங்குவதும் ஒரு நாட்டிற்கு பெருஞ்சுமைகள் (போக்கினங்கள்[1]) ஆகும். ஆனுல் அவைகளே, பாட்டாளிகளின் தலைமையிலானப் புரட்சிக்கு நல்லவையாகவும் (இருப்பினங்களாகவும்[2]) உள்ளன. உழவர்குடியாகிய பரந்த பெரும் நட்பு அணியைப் பெற்றுத் தருவதால் அவை அவ்வாறு நல்லவை ஆகும். அக்டோபர் புரட்சிக்கு முந்திய உருசிய நாட்டில் நிலவுடைமை வலிமையுடன் இருந்தது. உழவர் பெருமக்களின் ஆதரவுடனேயே

சோவியத் பொதுவுடைமைக் (போல்சவிக்குக்) கட்சி புரட்சியில் வாகை சூடியது. சீன நாட்டில் அந்நிலைமை இன்னும் கூடுதலாகவே இருந்தது. 50 கோடிக்கும் மேற்பட்டு நாட்டுப்புறத்தில் வாழுகின்ற மக்களை கொண்ட ஓர் உழவுப் பெரு நாடு எங்கள் நாடாகும். கடந்த காலத்தில், போராடுவதில் உழவர் பெருமக்களையே பெரிதும் சார்ந்து நின்றோம். இப்போதும்கூட, அவ்வுழவர்கள் ஓர் அமைப்பாக திரட்டப் பெற்றும்; வேளாண்மை கூட்டுறவுமயமாக்க பெற்றும் இருப்பதனாலேயே, நம்முடைய நகர்புற முதலாளிய வகுப்பு சமூகவுடைமைக்குரிய (சோசலிச) மாற்றத்தை விரைந்து ஏற்றுக் கொண்டுள்ளது. உழவர்களிடையே கட்சியின் செயல்பாடு ஓர் உயிர் துடிப்பான சிறப்பினை பெற்றுள்ளதும் அதனைக் கருதியே ஆகும்.

நிலவுடைமை வலிமையுடன் விளங்குகின்ற நாடுகளில் எல்லாம் பாட்டாளி வகுப்பினுடைய அரசியல் கட்சியானது, நாட்டுப்புறத்துக்குக்குச் சென்று உழவர்களின் ஒத்துழைப்பை நாடவேண்டும். இது என்னுடைய கருத்தாகும். அறிவாளிகள் உழவர்ப் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்பை நாடி, நாட்டுப்புறங்களுக்குச் செல்கையில், சரியானதொரு போக்கு இல்லாமல், அவ்வுழவர்க் குடியினரின் நம்பிக்கையை அவர்களால் வென்றெடுக்க முடியாது. அவர்கள் நகர்ப்புற நிலைமைகளைப்பற்றியும் உழவர்களின் உளவியலைப் பற்றியும் ஒன்றுமே அறியாதவர்களாக இருக்கின்றனர். ஆதலின், அவர்கள் அங்குள்ள உழவர் பெருமக்களின் சிக்கல்களை முற்றிலும் சரியான முறையில் தீர்த்து வைக்கமுடியாது.

நெடுங்காலத்திற்குப் பின்னரும்; உழவர்களோடு உண்மையாகவே ஒன்றிகலந்து அவர்களின் நலனுக்காக போராடுவதையும் மெய்ப்பித்துக் காட்டியப் பின்னருமே, நாம் முழுமையான வெற்றியைப் பெறமுடியும் என்பது எம்முடையப் பட்டறிவாகும். உழவர்கள் நம்மை எடுத்த எடுப்பிலேயே நம்பிவிடுவார்கள் என்று யாரும் கனவுகாண வேண்டாம். அவர்களுக்கு நாம் சில உதவிகளைச் செய்த உடனேயே அவர்கள் நம்மை நம்பிவிடுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவேண்டாம்.

பாட்டாளி வகுப்பின் தலையாய கூட்டாளிகள் உழவப் பெருங்குடி மக்கள்தான்; நம்முடைய கட்சியும் உழவர்களிடையே பணியாற்றுவதின் சிறப்பை சரியாக முதலில் உணர்ந்திருக்கவில்லை. அதனால், அஃது நகர்புறத்தில் வேலை

---

1) Liabilities 2) Assets

செய்வதை முதன்மையானதாக வைத்து நாட்டுப்புறங்களில் பணியாற்றுவதை இரண்டாம் நிலையில் இருத்தியது. இந்தியா, இந்தோனேசியா, போன்ற ஆசிய நாடுகளில் உள்ள பொதுவுடைமைக் கட்சிகள் நாட்டுப்புறங்களில் பணியை அவ்வளவு சிறப்பாகச் செய்யவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

முதலாவதாக, உழவர்களிடையே பணியாற்றுவதில் நம்முடையக் கட்சி வெற்றிப்பெறவில்லை. அறிவாளிகள் அவர்களுக்கே உரிய ஒருவகை வீராப்பை—அறிவாளிகளுக் குரிய இறுமாப்பை—கொண்டுள்ளனர். அதனுல் தாங்கள் தாழ்வாகக் கருதிய அந்நாட்டுப்புறத்திற்குச் செல்வதில் அவர்கள் நாட்டம் காட்டவில்லை. உழவர்கள் தங்களைப் பொறுத்தவரை, இந்த அறிவாளிகளை ஐயத்துடனேயே பார்த்தனர். அத்துடன், நம்முடைய கட்சியும்கூட நாட்டுப் புறத்தை புரிந்துகொள்ள சரியான வழிமுறையை அதுவரைக் கண்டெடுக்கவும் இல்லை. பிறகு, அந்நாட்டுப்புறத்திற்கு நாம் மீண்டும் செல்ல நேர்ந்தப்போது, ஒரு வழிமுறையை கண்டறிந்து நாட்டுப்புறத்திலுள்ள பல்வேறு வகுப்புகளையும் ஆய்ந்தறிந்ததால், உழவப் பெருங்குடி மக்களின் புரட்சிக் கோரிக்கைகளை புரிந்துக்கொள்ள நேரிட்டது.

முதலாவது கால கட்டத்தில், நாட்டுப் புறத்தைப் பற்றிய தெளிவான கருத்துக்களை நாம் பெற்றிருக்கவில்லை. சென்-தூ-சியுவின் வலதுசாரி நிறமாறித்தனத்தினுல் நம் முடைய முதற்பெரும் கூட்டாளியாகிய உழவர்கள் கைவிடப் பெற்றனர். நமது தோழர்களில் பலர் நாட்டுப்புறத்தை ஒரு வெட்டவெளியாகவேக் கருதினர். அதாவது, அந்நாட்டுப் புறத்தை வகுப்பு நோக்குடன் பார்ப்பது எவ்வாறு என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் மார்க்சியத்தை ஓரளவுக்கு புரிந்துக்கொண்ட பின்னரே, அந்நாட்டுப் புறத் தைப் பார்ப்பதில் வகுப்புப் பார்வையை கடைப்பிடிக்கத் துவங்கினர். நாட்டுப்புறம் ஒரு வெட்ட வெளியாக இல்லா மல், செல்வந்தர்களாகவும்; ஏழைகளாகவும் மிகவும் ஏழை களாகவும்; பண்ணைக்கூலிகளாகவும், வறிய உழவர்களாக வும், இடைத்தர உழவர்களாகவும், பணக்கார உழவர்களாக வும்; நிலக்கிழார்களாகவும் பல்வேறு அடுக்குகளாக இருப் பது புலனுகியது. இந்த காலகட்டத்தில்தான், நான் நாட்டுப் புறத்தைப்பற்றிய ஓர் ஆய்வு செய்தேன்; பல காலங்களுக்குத் தொடர்ந்து நீடித்த உழவர் இயக்க ஆய்வுக் கழகங்களை நிறு வினேன். எனக்கு ஓரளவு மார்க்சியம் தெரிந்திருந்தும், நாட்டுப்புறத்தைப் பற்றிய என்னுடைய அறிவு அவ்வளவு ஆழமானதாக இருக்கவில்லை.

இரண்டாவது காலகட்டத்தில், நல்லாசிரியனாக அப்போது நமக்கு வாய்த்த சியாங்-கே-சேக்கிற்கு நாம் நன்றி சொல்லவேண்டும். அவன் நம்மை நாட்டுப் புறத்திற்கே துரத்திவிட்டான். அஃது, நீண்ட ஒரு காலவெளி ஆகும்; அவனை எதிர்த்து நாம் போரிட்ட பத்தாண்டு காலம் அதுவாகும். அவ்வகையில், நாம் நாட்டுப்புறத்தை ஆராயும்படி வலியுறுத்தப்பெற்றோம். முந்திய சில ஆண்டுகளில், நாட்டுப் புறத்தைப்பற்றிய நம்முடைய அறிவு அவ்வளவு ஆழமுடையதாக இருக்கவில்லை; பின்னர் அஃது தேற்றமும் ஆழமும் பெற்றது. இந்த கால கட்டத்தில், ஒன்றன்பின் ஒன்றாக சூச்யூப் பாய், லீ லீ சான், வாங்-மிங் போன்றோராக உருவாகிய மூவகை 'இடதுசாரி' நிறமாறித்தனத்தின் வழிநெறிகள் நம்முடைய கட்சிக்கு மிகப் பெரும் இழப்புகளை ஏற்படுத்தியது. அதிலும் குறிப்பாக, வாங்-மிங்கின் 'இடதுசாரி' நிறமாறித்தனப்போக்கு நமது கட்சிக்குரிய பெரும்பாலான நாட்டுப்புறத் தளப்பகுதிகளின் வீழ்ச்சிக்கு வித்திட்டது.

அதன் பின்னர், யப்பான் எதிர்ப்புப்போர் என்னும் மூன்றாவது காலகட்டம் வந்தது. யப்பானிய வல்லரசாளர்கள் சீனத்தின்மீது போர் தொடுத்தபோது, நாம் கோமிங்டங்குடன் போரிடுவதை நிறுத்தி, அதற்கு மாறாக யப்பானிய வல்லரசுடன் போர் புரிந்தோம். அதுபோது நமது தோழர்கள் கோமிங்டாங் பகுதிகளில் இருந்த பட்டணங்களுக்கு வெளிப்படையாகச் செல்ல முடிந்தது. இதற்கு முன்பு இடதுசாரி நிறமாறித்தனப் போக்கை திணித்த பெருந்தவற்றை இழைத்த வாங்-மிங், இப்போது வலதுசாரி நிறமாறித்தன வழி நெறியைத் திணிக்கின்ற தவற்றைச் செய்தார். முதலில் அவர் பொதுவுடைமை பேருலகில் **(Communist International)** கடுந்தீவிர இடதுசாரிக் கொள்கையை செயல்படுத்தினார். பின்னர் அவர் கடுந்தீவிர வலதுசாரிக் கொள்கையை செயல்படுத்தலானார். அவரும் கூட எதிர்நிலைச்சான்றுகளைக் கொண்டு நம்முடைய கட்சிக்குக் கல்வி புகட்டிய ஒரு நல்லாசிரியர் ஆவர்ர்.

அதுபோன்றே லீ லீ சானும் எதிர்நிலைச் சான்றுகளைக் கொண்டு கல்வியூட்டுகின்ற மற்றொரு நல்லாசிரியராக அமையப்பெற்றோம். அந்நாளில் அவர்கள் இழைத்த முதற்பெரும் தவறு, வரட்டுத்தனமாகும். பிறநாட்டு பட்டறிவுகளை எந்திரவகையில் இறக்குமதி செய்ய முனைந்ததே அதுவாகும். நம்முடைய கட்சி அவர்களின் தவறான வழிநெறியை முறியடித்தது. அனைத்தும் தழுவிய பேருண்மையான மார்க்சிய லெனினியத்தை சீன நாட்டிற்குரிய உருப்படியான

நிலைமைகளுடன் இணைப்பதற்கான வழிமுறையை உண்மையாகக் கண்டெடுத்தது. இதன் விளைவாக, நான்காவது கட்டத்தில், சியாங்-கே-சேக் நம்மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தபோது, அவனைத் தூக்கியெறிந்துவிட்டு சீன மக்கள் குடியரசை நிறுவ முடிந்தது.

நாட்டுப்புறத் தளப்பகுதிகளைக் கட்டியமைத்து, அந் நாட்டுப் புறத்திலிருந்து நகர்புறங்களைச் சுற்றிவளைத்து, இறுதியாக அந்நகரங்களைக் கைப்பற்றுவது என்னும் சீனப் புரட்சியின் பட்டறிவு, ஆய்வுக்குப் பயன்படுமே அன்றி, அஃது உங்கள் நாடுகளுக்கு முழுவதுமாகப் பொருந்தாது. சீனத்தின் பட்டறிவை எந்திரவகையில் உங்கள் நாடுகளுக்கு அப்படியே பொருத்திப் பார்க்கவேண்டாம் என உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன். பிற நாட்டின் பட்டறிவு எதுவும் நம்முடைய ஆய்வுக்கு மட்டுமேபயன்படும். மாறாக, அதை ஒரு வரட்டுக் கோட்பாடாகக் கருதக்கூடாது. அனைத்தும் தழுவிய உண்மையாகிய மார்க்சிய-இலெனினியமும் உங்கள் சொந்த நாட்டிற்குரிய உருப்படியான நிலைமைகளும் ஆகிய இரண்டும் ஒன்றிணைக்கப் பெறவேண்டும்.

நீங்கள் உழவர்களை வென்றெடுத்து அவர்களைச் சார்ந்து நிற்கவேண்டுமாயின், நாட்டுப் புறப்பகுதிகளில் ஆய்வுகள் நடத்தவேண்டும். அவ்வகையில், ஓரிரு ஊர்களில் ஆய்வு செய்வது, அங்கு நிலவும் வகுப்பு ஆற்றல்கள், பொருளியல் நிலைமை, வாழ்க்கை நிலைமை போன்றவற்றைப்பற்றிய தெளிவான ஒரு கருத்தைப்பெறுகின்ற வகையில் அந்நாட்டுப் புறத்தில் ஓரிருவாரங்கள் கழிப்பது என்பதே அம்முறையாகும். கட்சியின் பொதுச்செயலர் போன்ற முதலைத் தலைவர்கள் தாங்களாகவே இப்பணியை மேற்கொள்ளவேண்டும். ஓரிரு ஊர்களைப்பற்றி அறிய முற்படவேண்டும்; அதற்கான நேரத்தை ஒதுக்கியேயாகவேண்டும். அஃது பயன்தரும் முயற்சியாகும். பல்வேறு ஊர்க் குருவிகள் இருப்பினும், அவற்றில் ஒவ்வொன்றையும் தனித்தனியாக அறுத்து ஆராய வேண்டியதில்லை. ஓரிரு குருவிகளை மட்டுமே அறுத்தாய்ந்தாலேப்போதும். கட்சியின் பொதுச்செயலர், ஓரிரு ஊர்களைப்பற்றி ஆய்வு நடத்தி, அஃது இவ்வாறுனது என அறிந்தப்பின்னரே, பிற தோழர்களுக்கு ஊர்ப்புறங்களைப்பற்றி தெரியப்படுத்துவதற்கும்; அங்குள்ள உருப்படியான நிலைமைகளைப் பற்றி தெளிவானக் கருத்தை அவர்கள் பெறுவதற்கும், அவரால் உதவ இயலும். பல நாடுகளில் கட்சியின் பொதுச்செயலர்கள் ஓரிரு குருவிகளை அறுத்து ஆய்வதற்கு சிறப்பு தருவதில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. நாட்டுப்

புறத்தைப்பற்றி அவர்கள் சிறிது தெரிந்துவைத்துள்ளார்கள் என்பது உண்மைதான். ஆயினும், அதையொட்டிய அவர்களின் அறிவு அத்துணை ஆழமுள்ளதாக இருப்பதில்லை. அதனுல், அவர்கள் விடுகின்ற ஆணைமுறிகள் (Directives) யாவும் நாட்டுப்புறச் சூழ்நிலைகளுக்குப் பொருந்திவருவனவாக இல்லை. அதுபோலவே நடுவம், மாநிலம், மாவட்டம் போன்ற மட்டத்திலான கட்சியின் தலைமை அமைப்புகளின் பொறுப்பில் உள்ள தோழர்கள், தாங்களாகவே ஓரிரு ஊர்களை ஆய்வு செய்வதையோ அன்றி ஓரிரு ஊர்க்குருவிகளை அறுத்தாய்வதையோ செய்யவேண்டும். இதையே நாம் 'உடற் கூற்றியல்' (Anatomy) என்று கூறுகிறோம்.

குதிரையின் மீதிருந்துக்கொண்டே பூக்களைப் பார்ப்பதும் குதிரையிலிருந்து கீழிறங்கிவந்து அப் பூக்களை காண்பதும் என இருவகையான ஆய்வுமுறைகள் உள்ளன. அப்பூக்கள் பலவகைகளாகும். அவற்றை குதிரைமீதிருந்து பார்ப்பீர்களேயானுல், மேலோட்டமான பதிவுகளை மட்டுமே பெற முடியும். இலத்தின் அமெரிக்காவிலிருந்து ஆசியாவரை வந்துள்ள நீங்கள் அப்பூக்களை குதிரைமேலிருந்தபடியே பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். உங்கள் நாடுகளிலேயே பலப் பூக்கள் உள்ளன. அவற்றை ஓரிருமுறை மேம்போக்காப் பார்ப்பதோடு நின்றுவிட்டால் மட்டும் போதாது. குதிரையிலிருந்து கீழிறங்கி அப் பூக்களைப் பார்க்கின்ற இரண்டாவது வழியையும் கடைப்பிடிக்கவேண்டும். அதாவது, குதிரையிலிருந்து இறங்கி அவற்றைப் பார்க்கவேண்டும். அருகில் சென்று அவற்றை கூர்ந்து நோக்கி, அவற்றில் ஒரு பூவை ஆய்ந்து பார்க்கவேண்டும். அல்லது ஓர் ஊர்க்குருவியை அறுத்தாய்தல்வேண்டும்.

வல்லரசுகளின் ஒடுக்குமுறைக்கு உட்பட்டுள்ள நாடுகளில், உள்நாட்டு (தேசீய) முதலாளிய வகுப்பு என்றும் தரகு முதலாளிய வகுப்பு என்றும் இருவகையான முதலாளிய வகுப்புகள் உள்ளன. இத்தகைய முதலாளிய வகுப்புகள் உங்கள் நாட்டில் உள்ளனவா? ஏறத்தாழ இருக்கின்றன எனலாம்.

தரகு முதலாளிய வகுப்பு எப்பொழுதும் வல்லரசின் பின்னேடுகின்ற நாய்போலவும், புரட்சியின் இலக்காகவும் உள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்சு போன்ற பல்வேறு வல்லரசு நாடுகளில் உள்ள பல குத்தகைப் பெருமுதலாளிய (Monopolist) கும்பல்கள் இருக்கின்றன. பல்

வேறு தரகு கும்பல்களுக்கு எதிராக நடக்கும் போராட்டத்தில் வல்லரசு நாடுகளுக்கிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திக்கொள்வது இன்றியமையாததாகும். முதலில் அவற்றில் ஒன்றை ஈடுக்கட்டிக்கொண்டு, முதன்மையான உடனடி எதிரிமீது தாக்குதல் தொடுக்கவேண்டும். முன்னுளில், தரகு முதலாளிய வகுப்பு, பிரிட்டன், அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளை ஆதரித்து நின்ற குழுமங்களாக இருந்ததை எடுத்துக் காட்டலாம்.

யப்பானை எதிர்ப்புப் போரின்போது, பிரிட்டனும், அமெரிக்காவும். ஒருபக்கமும், யப்பான் மறுபக்கமும் அமைய அவற்றிற்கு இடையிலான முரண்பாட்டை நாம்பயன்படுத்திக் கொண்டோம். முதலில் யப்பானிய மண்வெறியர்கள் மீதும் அவர்களைச் சார்ந்திருந்த தரகு கூட்டத்தின் மீதும் தாக்குதல் தொடுத்தோம். அதன் பின்னர், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மண் வெறியர்கள் பக்கம் திரும்பி, அவர்களுக்கு அதிரடிக்கொடுத்தோம். அமெரிக்கா, பிரிட்டன்போன்ற நாடுகளைச் சார்ந்து நின்ற தரகு கும்பல்களை ஒடுக்கினோம்.

அதுபோன்றே, நிலக்கிழார் வகுப்பும் பல்வேறு உட்பிரிவுகளை கொண்டுள்ளது. மிகவும் பிற்போக்கான நிலக்கிழார்கள் எண்ணிக்கையில் மிகச் சிலராவர். நாம் தாக்குதல் தொடுக்கும்போது, நாட்டுப்பற்றும், வல்லரசை எதிர்த்துப் போரிடுவதில் நாட்டமும் கொண்ட நிலக்கிழார்களை மிகவும் பிற்போக்கான நிலக்கிழார்களுடன் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது. அத்துடன் பெரிய சிறிய நிலக்கிழார்களை வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்.

ஒரே நேரத்தில் மிகப் பல எதிரிகளைத் தாக்கவேண்டாம். ஒருசிலரை மட்டுமே தாக்கவேண்டும். விரல்விட்டு எண்ணப்படக்கூடிய பெருநிலக்கிழார்களைப் பொறுத்தவரையிலும் கூட, அவர்களில் மிகமிக பிற்போக்கான நிலக்கிழார்களை மட்டுமே தாக்கவும், ஒவ்வொரு நிலக்கிழாரையும் தாக்குவதென்பது மிகவும் புரட்சிகரமானதாகத் தோன்றிடினும், அஃது உண்மையில் பெருந்தீங்கு இழைக்க செய்யும்.

உள்நாட்டு (தேசீய) முதலாளிய வகுப்பு நமக்கு ஓர் எதிரியாகும். "எதிரிகள் எப்போதும் இணைவதுண்டு" என்பது சீனத்தில் பரவலாக அறிந்த ஒரு பழமொழியாகும். உள்நாட்டு (தேசீய) முதலாளிய வகுப்பை அணுகும்போது எச்சரிக்கையுடன் இருப்பது தேவை. அதுவே சீனப் புரட்சியின் பட்டறிவாகும். அத்தேசீய முதலாளிய வகுப்பு தொழி

லாளர் வகுப்புக்கு எதிரானதாகிய அதே வேளையில், வல்லரசுக்கும் எதிரானதாகும். வல்லரசையும் நிலவுடைமையையும் எதிர்த்துப் போரிடுவது நம்முடைய முதற்பெரும் கடமையாக இருக்கின்ற உண்மையைக் கருதியும், அவ்விரு பகைவர்களையும் தூக்கி எறிந்தாலன்றி மக்கள் விடுதலை என்பது நடவாததொன்று என்பதைக் கருதியும், வல்லரசுக்கு எதிராக போராட்டத்தில் அஃது ஈடுபடுமாறு செய்யவேண்டும் என்பதைக் கருதியும், அந்த உள்நாட்டு (தேசிய) முதலாளிய வகுப்பை எல்லாவகையிலும் வென்றெடுக்கவேண்டும்.

உள்நாட்டு (தேசிய) முதலாளிய வகுப்பு, நிலக்கிழார் வகுப்புடன் நெருங்கிய உறவைக் கொண்டிருப்பதால், அஃது நிலவுடைமையை எதிர்த்துப் போரிடுவதில் நாட்டம் காட்டுவதில்லை. அதற்கும்மேலாக, பாட்டாளி வகுப்பை ஒடுக்கவும் சுரண்டவும் செய்கின்றது. ஆகவே, அந்த வகுப்பை எதிர்த்துப் போராடவேண்டும்.

வல்லரசுக்கு எதிராக நாம் ஆற்றுகின்ற போரில், உள்நாட்டு முதலாளிய வகுப்பும் நம்மோடு சேரும்வகையில் நாம் அவ்வகுப்பை வென்றெடுக்க வேண்டுமாயின், அதற்கு எதிரான போராட்டத்தை எப்போது நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது, சரியான போராட்டங்களின் அடிப்படையில் — நமக்கு நன்மைக் கிட்டும் வகையில் — கட்டுப்பாட்டுடன் அப்போராட்டத்தை நடத்தவேண்டும். வேறு வகையில் சொல்வதெனின், நாம் போராட்டம் நடத்துவதற்குரிய தக்க அடிப்படைகளைப் பெற்றிருக்க வேண்டும்; வெற்றி உறுதியாகக் கிட்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்; உரிய அளவிலான வெற்றிக் கிட்டியபோது கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க வேண்டும். தொழிலாளர்கள் முதலாளிகள் ஆகிய இருத்தரப்பினரின் நிலைமையும் ஆய்வுகளை மேற்கொள்வது இன்றியமையாததாவது அதனைக் கருதியே ஆகும்.

நாம் தொழிலாளர்களைப்பற்றி மட்டுமே அறிந்து, முதலாளிகளைப்பற்றி அறியாமல் இருப்போமாயின், அம்முதலாளிகளோடு பேச்சு நடத்தமுடியாது. அவ்வகையில், தனி மாதிரி நிலைமைகளை ஆராய்வதும், ஓரிரு ஊர்க்குவிகளை அறுத்தாய்வதும்கூட இன்றியமையாததாகும். பூக்களை குதிரைமீதிருந்து பார்ப்பது, குதிரையிலிருந்து கீழிறங்கி பார்ப்பது ஆகிய இரண்டு முறைகளையும் அதே போன்று பயன்படுத்த வேண்டும்.

வல்லரசுக்கும் நிலவுடைமைக்கும் எதிரானப் போராட்டத்திற்குரிய வரலாற்றுக் கட்டம் முழுவதும், நாம் உள்நாட்டு (தேசிய) முதலாளி வகுப்பை வென்றெடுத்து அவர்களோடு ஒன்றுபடவேண்டும். அதனுல் அவ்வகுப்பு வல்லரசை எதிர்த்துப் போராடுகின்ற மக்களை ஆதரிக்கச் செய்யும். வல்லரசையும் நிலவுடைமையையும் எதிர்க்கின்ற கடமை முடிந்தப் பின்னரும்கூட — சில காலம்வரை — நாம் அந்த உள்நாட்டு (தேசிய) முதலாளியத்தோடுடனுன கூட்டை வைத்துக்கொள்ள வேண்டும். அஃது வல்லரசின் வன்தாக்குதலை எதிர்த்துப் போராடுவதற்கும், படைப்பு ஆக்கத்தை விரிவுப் படுத்துவதற்கும், சந்தையை உறுதியாக்கிக் கொள்வதற்கும் — முதலாளிய அறிஞர்களுக்கு புத்துருத் தருவதற்கும்கூட — பயன்படுவதாக இருக்கும்.

நீங்கள் இன்னும் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்கவில்லை; ஆனுல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றீர்கள். உள்நாட்டு (தேசிய) முதலாளிய வகுப்போடு "ஒற்றுமை போராட்டம் ஆகிய இரண்டும்" என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். வல்லரசுக்கு எதிரான பொதுவான போராட்டத்தில் அவர்களோடு சேரவும் வல்லரசுக்கெதிரான அதனுடைய எல்லா பேச்சுக்களையும் செயல்களையும் ஊக்குவிக்கவும் வேண்டும். அதே நேரத்தில், அவர்களின் பிற்போக்குத்தனமானதும், தொழிலாளர் வகுப்புக்கு எதிரானதும், பொதுவுடைமைக்கு எதிரானதுமான பேச்சுக்களுக்கும் செயல்களுக்கும் எதிராக உரியதொரு போராட்டத்தையும் நடத்தவேண்டும். ஒருதலையாக இருப்பது தவருகும். ஒற்றுமை இல்லாத போராட்டம் 'இடதுசாரித்'திரிபியல் (Left Deviationist) என்னும் தவருகும். போராட்டம் இல்லாத ஒற்றுமை, வலதுசாரித்திரிபியல் (Right Deviationist) என்னும் தவருகும். அவ்விரு தவறுகளும் கட்சியில் தோன்றின. அவற்றிலிருந்து நாம் கசப்பான படிப்பினைகளைப் பெற்றேம். பின்னர், அவ்விரு வகை பட்டறிவைத் தொகுத்தாய்ந்தோம். அதுமுதல், "ஒற்றுமை, போராட்டம் ஆகிய இரண்டும்" என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கலானேம். அதாவது, தேவைப்படும் போதெல்லாம் போராட்டம், முடிந்தபோதெல்லாம் ஒற்றுமை என்னும் கொள்கையை மேற்கொண்டோம். உள்நாட்டு (தேசிய) முதலாளியத்தோடு ஒன்றுபடுவதும் வல்லரசுக் கெதிரானப் போராட்டத்தில் வெற்றிபெறுவதும் என்பதே நமது போராட்டத்தின் குறிக்கோளாகும்.

வல்லரசினதும், நிலவுடைமையினதும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிய நாடுகளில், பாட்டாளி வகுப்பின் அரசியல் கட்சியானது. தேசியப் பதாகையை உயர்த்தவேண்டும். வல்லரசின் பின்னேடும் நாய்களைத் தவிர்த்து, ஒன்றுபடுத்தப்பெற வல்ல ஆற்றல்கள் அனைத்துடனும் ஒன்றும் வகையில் தேசிய ஒற்றுமைக்கான ஒரு திட்டம் நமக்கென இருத்தல்வேண்டும். பொதுவுடைமைக் கட்சி எவ்வளவு நாட்டுப்பற்றுமிக்கது; அமைதியை நாடுவது; உள்நாட்டு ஒற்றுமையை எந்த அளவுக்கு விரும்புகின்றது என்பதை நாடு முழுவதும் பார்க்கட்டும். இது வல்லரசையும் அதன் பின்னேடும் நாய்களையும்—பெரும் நிலவுடைமை வகுப்பையும், பெரும் முதலாளிய வகுப்பையும் கூட—தனிமைப்படுத்த உதவும்.

பொதுவுடைமையாளர்கள், தவறுகள் நேருமே என அஞ்சிகிடக்கக் கூடாது. தவறுகளுக்கு ஓர் இருமை இயல்பு உண்டு. ஒரு பக்கம் தவறுகள் கட்சிக்கும் மக்களுக்கும் தீங்கு பயக்கின்றன. மறுபக்கம் அவை ஓர் நல்லாசிரியனைப்போல் அமைந்து கட்சிக்கும் மக்களுக்கும் கல்வி புகட்டுகின்றன; புரட்சிக்கு நன்மை பயக்கின்றன. தோல்வியே வெற்றியின் தாய். அத்தோல்வியில் நன்மை இல்லையெனின், அது எப்படி வெற்றியின் தாயாக் இருக்கமுடியும்? மிகப்பலத் தவறுகளைச் செய்யும்போது ஒரு திருப்பம் ஏற்படத்தான் செய்யும், அது மார்க்சியமாகும். "தவறுகள் மலிந்து வரம்புமீறுகையில், பொருட்கள் அவற்றின் எதிர்மறைகளாக மாறிவிடுகின்றன. தவறுகள் மலைபோல் குவியும்போது, ஒளிவிளக்கம் வெகு தொலைவில் இல்லை.

★ ★ ★

---

படிகள் கிடைக்கும் இடம் :

**மறைமலையடிகள் நூல் விற்பனையகம்**

காளியம்மன் கோயில், 18-B, 3வது தெரு,

அலசூர், பெங்களூர்-560 008.

K. Poongavanam,
Head of the Dept of Tamil
Maharani's Arts College
Bangalore-560001

ந. முத்துக்குமரன்
69-ஆ. காந்தி சாலை,
பல்லடம்,
638 664
கோவை மாவட்டம்